# தமிழ்ச் சிட்டு

தனித்தமிழ்
சிறுவர்
கலை இதழ்

TANJORE

துன்பம் வரும் போழ்தில்-நீ
துவண்டு விட வேண்டா!
இன்பம் வரும் பின்னே-என
எண்ணியிரு தம்பி!


சூழ்ச்சி பிறர் செய்வார்-நீ
சோர்ந்து விடல் தீது!
தாழ்ச்சி வரும் முன்னே-நீ
தப்பி விடல் நன்று!

வாய்மைஉளம் கொண்டே-உன்
வாழ்வில் நலம் தேடு!
தூய்மைமனம் கொண்டோர்-ஒரு
தோல்வி பெறல் இல்லை!

செல்வ வளம் எல்லாம்-நிலை
தேய்ந்து விடல் நேரும்!
கல்வி வளம் என்றும்-உனைக்
காத்து வரும் தம்பி!

குரல்: 2. இசை: 10.





# உலகம் சுற்றுவோம்

## வியட்நாமில் அமெரிக்க அழிவு!

அமெரிக்க கொலைவெறிக் கொள்கையால் அண்மை யாண்டுகளில் குண்டுகளால் 2,50,000 குழந்தைகள் கொல்லப்பட்டனர். 7,50,000 பேர் காயமுற்றனர். கொல்லப்பட்டவர்களில் 67% பேரும் காயமுற்றவர்களில் 85% பேரும் குழந்தைகளும், பெண்களும், முதியவர்களுமே யாவர். இதனால் வியட்நாமில் அமைதியாக வாழ்ந்துவந்த மக்களில் 5,50,000க்குக் குறைவில்லாத பேர்கள் 1964 இல் அமெரிக்காவின் கண்மூடித்தனமான அழிவுக் கொள்கைக்குப் பலியாகி உள்ளனர். 7,00,000 "எக்டார்" பரப்புள்ள வியட்நாமிய நிலங்கள் இன்னும் பல்லாண்டுக் காலத்துக்குப் பண்படுத்தமுடியாத பாலை நிலப் பரப்பாய் பாழ்படுத்தப்பட்டுள்ளன.

## அம்மை நோய்

பிரான்சில் 10-இல் ஒரு சாவு சின்னம்மையால்தான் என்று குறிப்பு ஏடுகள் காட்டுகின்றன. செருமனியில் 1796-இல் 65,000 மக்கள் சின்னம்மையால் இறந்தனர். பிரசுயாவில் மட்டும் 40,000 மக்கள் இறந்தனர். இந்தியாவில் 1950-இல் இருந்து 1961 வரை 4,53,414 பேர் இறந்திருக்கிறார்கள். இந்தக் கொடிய அம்மைத் தடுப்புக்காக நடுவண் அரசு 688.98 இலக்கம் உருபா ஒதுக்கியுள்ளது.

## அமெரிக்க உணவு!

அமெரிக்கா சென்ற பதினைந்து ஆண்டுகளில் இந்தியா உள்பட 116 நாடுகளுக்கு 15,00,00,000 கல்லெடை உணவு அனுப்பிக் கொடுத்து இருக்கிறது. இதன் மதிப்பு 20000000000 (இரண்டாயிரம் கோடி) தாலர். மதிப்பு உருபா 1500000000 (பதினைந்தாயிரம் கோடி) (செய்திகள்) ந. சு. தமிழன்பன், பண்டசோழநல்லூர்.

## இந்திய அமெரிக்கக் கல்வி வளர்ச்சி

கடந்த பதினைந்து ஆண்டுகளில் 68,000 இந்தியர்களுக்குமேல் அமெரிக்காவில் சென்று படித்தனர். பல்லாயிரக்கணக்கான அமெரிக்க இளைஞர்கள் இந்தியாவிற்கு வந்துள்ளனர். இன்று அமெரிக்கப் பல்கலைக்கழகங்களில் 8,000 இந்திய மாணவர்களும், 3,000 இந்திய மருத்துவர்களும் படிக்கின்றனர். 4,000 இந்தியர்கள் அமெரிக்காவில் உள்ள பல்கலைக்கழகங்களில் ஆசிரியர்களாகப் பணிபுரிகின்றனர். 25 அமெரிக்கப் பல்கலைக் கழகங்களிலும் பலப்பல கல்லூரிகளிலும் இந்தியத்துறைப் பாடத்திட்டங்கள் ஏற்படுத்தப் பட்டுள்ளன.

(செய்தி) சு. கலா.

# தமிழ்ச்சிட்டு

தனித்தமிழ்
சிறுவர் கலைஇதழ்


இன்றைய பயனே நேற்றைய உழைப்பு !
இன்றைய சிறுவர் நாளைய உலகம் !
நன்று செய்வதே நமக்குநல் வாழ்க்கை !
என்றும் அழியாது இருப்பது புகழே !


குரல்3- | தி பி. க௯௯௯ விடை (வைகாசி) சூன் –68 | இசை-10


## தம்பி! நீ, புதிய தமிழன்!

தம்பி! நீதான் புதிய தமிழன்!
இம்மியும் கீழ்மை உன்னிடம் இல்லை
சாதிச் செருக்கைச் சகதியில் போடு!
ஓதிய கல்வியும் ஒழுங்கும் கடைப்பிடி!
உலகை உயர்த்துதல் உன்றன் கடமை!
கலகம் செய்வோரைக் காறித் துப்பு!

உயர்ந்த கொள்கையும் உரங்கொள் நெஞ்சும்
அயர்வில் லாத அரும்பே ராற்றலும்—
கொண்டு விளங்கு; தீமையைக் கொல்வாய்!
பண்டைச் சிறப்பையும் புதுமைப் பயனையும்
ஒன்றாய்க் கலந்து ஓர் உண்மைக் கொள்கையை
நன்றாய் வகுத்து நாடெலாம் பரப்பு!

மக்களை ஒன்றென மதித்து நடப்பாய்!
இக்கால் உலகம் இழிந்து செல்வதைத்


வெளியீட்டாளர், பொறுப்பாசிரியர்:-பெருஞ்சித்திரன்.
தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.

தடுத்து நிறுத்தடா புதுமைத் தம்பியே!
எடுத்த கொள்கையில் வெற்றியை ஏந்து!
செயல் செயப் புறப்படு! சீர்செய் உலகத்தை!
தயக்கம் இன்றிக் கீழ்மையைத் தாக்கு!
மேல் பிறப் பென்றும் கீழ்ப்பிறப் பென்றும்
நால்வகை யாக நம்மவர் நாட்டிய
குலப்பிரி வுகளைக் குப்பையில் கிடத்து!
நிலமெலாம் ஒன்று! நிலத்துள மக்களும்
சரிநிகர் என்று சாற்றுவாய் தம்பி!
புரியும் தொழில்களால் பிரிவிலை என்பாய்!
உள்ளம் ஒன்றே மக்களை உயர்த்தும்!
குள்ள மாந்தரின் கூற்றைத் தகர்ப்பாய்!

எல்லா ஊரும் ஊரென ஏற்பாய்!
எல்லா நலமும் எல்லார்க்கும் என்பாய்!
ஊரை ஏய்க்கும் உலுத்தரை வீழ்த்து!
போரைக் கொண்டு, இவ் உலகைப் பொசுக்கிடும்
தீய நினைவைத் தீயுனுள் தள்ளு!
ஏய நிகரமை எடுத்து முழக்கு!

காற்றும் நீரும் கதிரவன் ஒளியும்
நேற்றும் இன்றும் நாளையும் நிலத்தின்
எல்லா உயிர்க்கும் சரிநிகர் – என்று
சொல்லால், செயலால் விளக்கிடு கண்ணே!

நிலமும் வளமும் நிகரென்று கூறுவாய்!
'இலம்'என் றிருப்பார் தமைக்கண்டு இரங்கு!
உண்ணச் சோறிலாது ஒருவன் வாடவும்
எண்ணிலா நலன்கள் ஒருவன் எய்தவும்
இருக்கின்ற நிலைமை எப்படி வந்தது?

கருக்கின்ற வெயிலில் ஒருவன் காயவும்
நிழலில் ஒருவன் நீட்டிப் படுக்கவும்
பழமை உலகம் ஏன் பார்த் திருந்தது?

கட்ட ஒருமுழக் கந்தலும் இன்றிக்
கொட்டும் மழையிலும் குளிரிலும் ஒருவன்
வாடிக் கிடப்பதும், மாடியில் ஒருவன்

ஆடிக் களிப்பதும் - எப்படி ஆனது?

உழைத்துழைத் தொருவன் ஓடாய்ப் போவதும்
உழைப்பிலா தொருவன் உண்டே உருள்வதும்
எப்படிச் சரியென ஏற்பது தம்பி!

அப்படி இருந்திடும் அமைப்பை மாற்றுவாய்!

பிறந்தவர் யாவரும் மாந்தப் பிறப்பே!
சிறந்தவர் என்பார் செயலால் உயர்ந்தவர்!

உலக நலன்கள் யாவர்க்கும் ஒன்றே!
சிலர் நலம் எய்தவும் பலர்துயர் எய்தவும்
வழிசெய் உலகினை மாற்றி வகுப்பாய்!
பழிசெய் வோரைக் களையெனப் பறித்தெறி!

ஆங்கொரு பேயன் அளவிலாப் பொருள்மேல்
தூங்குவான் ஆயின் அவனைத் துரத்து!
பறித்தவன் பொருளை யாவர்க்கும் பங்கிடு!
குறித்துவை இதனை உன்றன் நாட் குறிப்பில்!

இனிவரும் உலகம் எல்லார்க் கும்பொது!
தனியொரு மாந்த உடைமை தவறு!

பொதுநல உலகம் பூத்தது தம்பி!
புதுமைத் தமிழன் நீயடா தம்பி!

தமிழ்மொழி உன்னைத் தமிழன் ஆக் கட்டும்!
இமிழ்கடல் உலகில் பொதுமை என்பது
தமிழன் கண்ட தலைமைக் கொள்கை!
அமிழாக் கொள்கை அரிமாக் கொள்கை!
சிமிழ்க்காது இதனை உலகோர்க்குச் சொல்லு!
தமிழால் உலகத் தலைமை தாங்கு!

செயலால் உயர்ந்தது மேனாடு என்றால்
வயங்கிடும் உளத்தால் உயர்ந்ததுன் நாடு!

அவர்மொழி கண்டதோ அறிவியல் என்றால்
தமிழ்மொழி கண்டது மெய்யறி வென்றுரை!

அறிவியல் உடல்எனின் மெய்யறிவு உள்ளம்!
குறித்துவை இதனையும்! யாவர்க்கும் கூறிடு!

உயிர்களுக்கு உடலின் வளர்ச்சி போதாது!
உயர்களை உயர்த்துதல் உள்ளம் தம்பி!

உள்ளம் தாழ்ந்த உண்மையால் அன்றோ
கள்ளமும், கவடும், கயமையும் பிறந்தன.
ஏழ்மையும் கீழ்மையும் மக்களுள் தோன்றின!
தாழ்மையும் சேர்ந்தது! மாந்தரும் தாழ்ந்தனர்!

எனவே தம்பி! இதனைக் கேள்நீ:
கனவே அன்று; கற்பனை அன்று!
தமிழக் கொள்கையைத் தரையெலாம் ஊன்று!
அமிழும் உலகைக் காப்பதும் அதுதான்!
புதுமையும் அதுதான்! பொதுமையும் அதுதான்!
பதியவை நெஞ்சில்! உணர்வில்! உயிரிலே!

– பெருஞ்சித்திரன்

# கடிகாரம்

ஒன்று இரண்டு பனிரண்டு!
ஓடும்; பாடும் மணி உண்டு!

பெரிதாய்ச் சிறிதாய்க் கை உண்டு:
பேசும் 'டிக் டிக்' மொழி உண்டு!

முன்னங் கையில் கட்டிடலாம்!
மேடை மீதே வைத்திடலாம்!

சுவரில் தொங்கப் போட்டிடலாம்!
சொல்லும் மணியைக் கேட்டிடலாம்!

முனகிக் கொண்டே ஓடிடுமாம்!
முறுக்கா விட்டால் நின்றிடுமாம்!

அம்மா சுட்டாள் பணிகாரம்!
ஆனால் இதன்பேர் கடிகாரம்!

துரை-மாணிக்கம்.




# நல்லதும் தீயதும்.

துரை-மாணிக்கம்.

கனி இருக்கக் காயினைக்
கவர்ந்து தின்னல் நல்லதோ?
இனி திருக்கத் தீயதை
ஏற்றுச் செய்ய நினைப்பதோ?

நிழல் இருக்க வெயிலிலே
நடந்து செல்லு வார்களோ?
குழல் இருக்க இடியினைக்
கேட்டு மகிழு வார்களோ?

வீடிருக்க வெளியிலே
விழுந்து தூங்கப் போவரோ?
நாடிருக்கக் காட்டினை
நாடி வாழல் நல்லதோ?

கிளி இருக்கக் காக்கையைக்
கூட்டில் வைத்துக் காப்பரோ?
உளி இருக்க விரலினால்
உருவம் செதுக்க முனைவரோ?

அன்பிருக்க நெஞ்சிலே
அழுக்கு எண்ணம் வைப்பரோ?
பண்பிருக்க விலங்குபோல்
பழகி வாழல் நல்லதோ?

உண்மை இருக்கப் பொய்யினை
உரைத்து வாழல் ஏற்றதோ?
நன்மை இருக்கத் தீமையை
நாடிச் செய்தல் நல்லதோ?

# எண்ணிய எண் என்ன?

இரா. வ. சனார்த்தனம்.

உங்கள் நண்பர்களில் ஒருவன் உங்களிடம் வந்து, "நான் எண்ணிக் கொண்டுள்ள எண்ணை உன்னால் சொல்ல முடியுமா?" என்று கேட்டால் நீங்கள் என்ன சொல்வீர்கள்?

சற்றும் காலம் தாழ்த்தாமல் உடனே, 'சரி' என்று சொல்லிவிட்டு இந்த வழியைப் பின் பற்றுங்கள்.

நீங்கள் சொல்லப்போகும் விடையே 10-இன் கையில்தான் இருக்கிறது. ஆம். 10 தான் நிலை எண். இதை நினைவில் கொள்ளுங்கள்.

வழிக்கு வருவோம்.

நண்பன் எண்ணிய எண் 12 எனக்கொள்ளுங்கள்.

அதை 5 ஆல் பெருக்கச் சொல்லுங்கள் $12 \times 5 = 60$

உடன் 5 ஐக் கூட்டச் சொல்லுங்கள் $60 + 5 = 65$.

வந்த எண்ணை 2 ஆல் பெருக்கச் சொல்லுங்கள். $65 \times 2 = 130$

நிலை எண் 10 ஐக் கழிக்கச் சொல்லுங்கள். $130 - 10 = 120$.

இவ்வளவையும் நண்பனின் உள்ளத்திலேயே செய்து கொள்ள வேண்டும்.

10 ஐக் கழித்தபின் மீதி இருக்கும் எண்ணை உங்களிடம் சொல்லச் சொல்லுங்கள்.

அதுதான் —120.

[அஃதாவது நண்பன் 120 என்றுசொல்வான் இக்கணக்கின்படி]

உடனே நீங்கள் 120 ஐ நிலை எண்ணான 10 ஆல் வகுத்து [மனத்திற்குள்ளேயே] வரும் 12 ஐ, "நீ எண்ணிய எண் 12" என நண்பனிடம் கூறுங்கள்!




# அடக்கம்.

—பூதலூர்-முத்து

ஆறு சல சல வென்று ஓடிக்கொண்டிருந்தது. ஆற்றின் அருகே ஒரு தோட்டம். தோட்டத்தில் முளரி (உரோசா)ச் செடியில் பூத்த ஒரு முளரி (உரோசா)ப் பூ மினுமினுப்போடு காட்சியளித்தது. அந்த ஆற்றின் ஓரத்தில் அரளிச்செடியில் பூத்த அரளிப்பூ ஒன்று எளியவன்போல் நின்று காட்சியளித்தது.

தோட்டக் காவலில் இருந்த முளரி, அரளியின் பக்கம் திரும்பி ஏளனச் சிரிப்பொன்றை உதிர்த்தது.

“அழகு என்பது மருந்துக்குக்கூட இல்லாத அரளியே! ஏன் உனக்கு இவ்வளவு திமிர்?”

“என்ன, நானா திமிர்கொண்டேன்”? அரளிப்பூ பணிவோடு கேட்டது.

“என்னைப்போல் உருவத்திலும் நிறத்திலும் ஆவதற்கு முயற்சி செய்தாயே, இது திமிரல்லவா?”—முளரியின் வினாவில் செருக்கு மிகுந்திருந்தது.

“முளரி அக்கா, எனக்கா திமிர்? நானாகவா முயற்சி செய்தேன்? இறைவன் எனக்குப் படைத்தவை அல்லவா இவை!”

“உன் ஆவல் மண்ணாய்ப் போய்விட்டது பார்த்தாயா? எனக்கு இருக்கும் மணத்தைப் பெறக்கூட துடியாய்த் துடித்தாயே, நீ. ஆனால் கிடைத்ததா? இல்லையே! இனிமேலாவது அடக்கமாயிரு!” துடியாய்த் துடித்துக்கொண்டு பேசியது முளரி.

நேரம் கடந்துகொண்டிருந்தது. வீட்டுக்கார மங்கை யொருத்தி தோட்டத்திற்கு விரைந்து வந்தாள். அவளுடைய கைகள் அந்த ஒரே ஒரு முளரிப் பூவை வெடுக்கென்று பறிக்க, கால்கள் வீட்டுக்கு விரைந்தன. அரளியிடம் செருக்கோடு பேசிய முளரிக்கு மேலும் பெருமை பிடிபடவில்லை. தன்னையன்றோ எல்லாரும் விரும்பிச் சூடிக்கொள்கின்றார்கள் என்று பெருமிதத்தோடு அரளியை ஒருமுறை முறைத்துக் கொண்டு போனது.

அன்று காந்தியடிகளின் பிறந்த திருநாள். அவ்வூரில் அண்ணலுக்குப் பெரும் விழா. ஒரு தொண்டர் ஆற்றோரமாயிருந்த பூக்களை மென்மையோடு கொய்துகொண்டு வந்தார். அரளிச் செடியில் மலர்ந்திருந்த அந்த அரளிப் பூவையும் மென்மையுடன் கொய்தார், அவர். அரளிப்பூ மகிழ்ந்தது. அண்ணலின் உருவத்தை அழகுபடுத்தப்போகிறோம் என்பதாலா?

திருவிழா சிறப்பாக நடைபெறுகிறது. அண்ணல் காந்தியடிகளின் அழகு உருவம் ஊர்வலம் வருகிறது. மக்கள் திரள் கட்டுக்கடங்கவில்லை. அந்தக் கூட்டத்தில், முளரியைப் பறித்தாளே, அந்த மங்கையும் இருந்தாள். அந்த மங்கையின் தலைக்கொண்டையில் அம்மலர் காட்சியளித்தது.

மங்கையின் தலையிலிருந்த அப்பூ அண்ணலின் கழுத்தில் தவழ்ந்த-தன்னால் ஏளனமாக மதிக்கப்பட்ட அந்த அரளியைப்பார்த்து 'அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை ஆரிருள் உய்த்துவிடும், என்று உணர்ந்தது. கூட்ட நெரிசலில் சற்றுநேரத்தில் அப் பூ தரையில்விழுந்தது. கூட்டத்தினர் கால்களில்மிதிப்பட்டுச்சிதைந்தது.

## சில நாணய மாற்றுகள்.

| | | நம் நாட்டு மதிப்பு. |
|---|---|---|
| இங்கிலாந்து- | 20 சில்லிங் ஒரு பவுன்— | உரு 13.38, காசு |
| அமெரிக்கா- | 100 செண்ட்டு ஒரு தாலர்— | 4. 76. ,, |
| உருசியா- | 100 கோபெக் ஓர் உருபிள்— | 1. 19. ,, |
| பர்மா- | 100 பை ஒரு கியாட்டு— | 1. 00. ,, |
| இலங்கை- | 100 செண்ட்டு ஓர் உருபா— | 1. 01. ,, |
| மே. செருமனி- | 100 பென்னி ஒரு டுயூட்சுமார்க்கு— | 1. 13. ,, |
| சப்பான்— | 100 சிறிய என் ஓர் என்— | 1. 13. ,, |
| மலாயா- | 100 செண்ட்டு ஒரு தாலர்— | 1. 56. ,, |
| பாகித்தான்- | 16 அணு ஓர் உருபா— | 1. 00. ,, |

–பெருங்காப்பியன்

சோவியத் உருசியர்....

## சில செய்திகள்.

நாற்றமிகு-செம்பியன்.

1. 'சோவியத்' நாட்டின் மொத்தப் பரப்பளவு 2,24,00,000 சதுர சீர்டிகள் (மீட்டர்).

2. 'சோவியத்' நாட்டின் தலைநகர் 'மாசுகோ'.

3. 'சோவியத் உருசியா'வில் 1,872 நகரங்கள் உள்ளன.

4. 'சோவியத் குடியரசின்' மக்கள் தொகை ஏறத்தாழ 23½ கோடி.

5. இவர்களில் 12 கோடி 80 இலக்கம் பேர்கள் நகரங்களிலும் 10 கோடி 60 இலக்கம் பேர்கள் சிற்றூர்களிலும் வாழ்கின்றனர்.

6. 'உருசியாவில்' 5910 இலக்கம் கல்லெடை அளவுள்ள நிலக்கரி வெட்டி யெடுக்கப்படுகிறது.

7. 2860 இலக்கம் கல்லெடை அளவுள்ள நெய்யினங்கள் கிடைக்கின்றன 'சோவியத்'தில்.

8. 850 இலக்கம் கல்லெடை 'பைஞ்சுதை' (சிமெண்டு) 'உருசியாவில்' செய்யப்படுகிறது.

9. 407 ஆயிரம் 'பொறிகலப்பை'கள் (டிராக்டர்) செய்யப் படுகின்றன, 'சோவியத்' நாட்டில்.

10. 380 70 இலக்கம் கல்லெடைகள் அளவு 'வேதிய எருக்கள்' 'உருசியா'வில் செய்யப்படுகின்றன.

11. 320.40 இலக்கம் சுவர், கைக்கடிகைகயாரங்கள் செய்யப் படுகின்றன.

12. 50.80 இலக்கம் 'வானொலிப் பெட்டிகள்' ஆண்டுதோறும் 'உருசியா'வில் செய்யப்படுகின்றன.

13. 40.40 இலக்கம் 'தொலைக்காட்சிப் பெட்டிகள்' (டெலிவிசன்) செய்யப்படுகின்றன.

14 20.20 இலக்கம் 'குளிர்பதனப் பெட்டிகள்' செய்யப்பட்டன, 1966 ஆம் ஆண்டில்.

15. 'சோவியத்' நாட்டில் 767 மேற் கல்வி நிலையங்களும், 3,969 தொழில் நுட்பப் பள்ளிகளும் உள்ளன.

16. மொத்தம் 7 கோடி 30 இலக்கம் பேர்கள் பல்வேறு வகையான கல்வி பயில்கின்றனர்.

17. உருசியாவில் 3,68,000 பொது நூலகங்கள் உள்ளன.

18. அந்நூலகங்களில் 230 கோடிக்கும் மிகுதியான நூல்கள் உள்ளன.

19. 'சோவியத்' நாட்டில் 143 மொழிகள் பேசப்படுகின்றன.

20. ஆண்டுதோறும் 100 கோடிக்கும் மிகுதியான நூல்கள் அச்சிடப்படுகின்றன.

21. அந்நாட்டில் 100க்கும் மிகுதியான தேசிய இனங்கள் உள்ளன.

22. 1 நிமையத்தில் 'உருசியா'வில் 180 கல்லெடை இரும்பு உருக்குத் தயாரிக்கப்படுகிறது.

23. அங்கு ஆண்டுக்கு 17,12,00,000 கல்லெடை உணவுப் பொருள்கள் விளைவிக்கப்படுகின்றன.

24. 7 'சோவியத்' அறிவியல் அறிஞர்களுக்கு 'நோபல் பரிசு' கிடைத்துள்ளது.

25. 'சோவியத்' நாட்டில் 40 இலக்கத்திற்கு மிகுதியான மருத்துவர்கள் உள்ளனர்.

26. 3,40,00,000 பேர்கள் (67ஆம் ஆண்டு கணக்குப்படி) 'உதவித்தொகை' (பென்சன்) பெறுகின்றனர்.

27. 18 இலக்கத்திற்கும் மேற்பட்ட பொறிஇயல் வல்லுநர்கள் நாட்டில் பணியாற்றுகின்றனர்.

28. 4 இலக்கம் பெண்கள் மருத்துவர்களாகவும், 15 இலக்கம் பெண்கள் ஆசிரியைகளாகவும், 2,73,500 பெண்கள் அறிவியல் ஊழியர்களாகவும் பணியாற்றுகின்றனர்.


29. 'சோவியத்' நாடு 15 குடியரசுகள் சேர்ந்த கூட்டரசாகும்.

30. உலக மக்கள் தொகையில் 7 விழுக்காட்டைப் பெற்றுள்ள உருசியா, உலகத்தொழில் தயாரிப்பில் 20 விழுக்காட்டைத் தயாரிக்கிறது.

31. 113 நாடுகளுடன் நட்புறவு கொண்டுள்ளது.

32. மாந்தன் செய்த உலகின் முதல் செயற்கைத் துணைக் கோள் 1957, அக்டோபர் 4-ஆம் பக்கலன்று விண்வெளியில் செலுத்தப்பட்டது.

O



# பெரியோர் கதை!

## சார்லசு தார்வின் (CHARLES DARWIN)

-சு. குமரவேலன், விராலிமலை.

"மாந்தன் கடவுளால் உண்டாக்கப்படவில்லை. அவன் இயற்கை யாற்றலின் வளர்ந்த நிலையே. ஓரிடத்தில் நீர் பல நாட்கள் தேங்கி நிற்கும் பொழுது சிறுசிறு உயிரிகள் தோன்றுகின்றன, அவை சிறிது சிறிதாக வளர்ச்சியடைந்து குரங்குகளாகமாறி இயற்கையாற்றலினால் குரங்குகளின் வால்குறைந்து மாந்தன் உருவாகின்றான்" என்ற கருத்தை ஆராய்ந்து கூறிப் பலரின் வசை மொழியினைப் பெற்று உயர்ந்தவனே நம் சார்லசு தார்வின்.

பதினெட்டாம் நூற்றாண்டில் இங்கிலாந்தில் வாழ்ந்து, பண்டுவத் தொழில் செய்துவந்த எராசுமசு தார்வினுக்கு 'கருசுபரி' என்னுஞ் சிற்றூரில் 1809-ஆம் ஆண்டு பிஃப்ரவரித் திங்கள் 12-ஆம் பக்கல் பிறந்த குழந்தையே தார்வின். இளமையில் தார்வினிடம் முன்னேற்றம் அடைவதற்குரிய செயல்கள் சிறிதும் இல்லை. ஏனெனில் இவர் தமது எட்டாவது அகவையில் தாயை இழந்த பிறகே பள்ளிக்குப் படிக்கச் சென்றார். பள்ளிக்குச் சென்றவர் ஓராண்டுக்குப் பிறகு படிப்பின்மேல் கவனம் செலுத்தாது, பூஞ்செடிகளில் வந்தமரும் உயிரினங்களை ஆய்வு செய்யத் தொடங்கினார்.

தார்வின் இளமையில் பிறரை வியப்புக்குள்ளாக்க வேண்டிப் பொய் கூறுவாராம். ஆயினும் பிறரிடமும், பிற உயிரினங்கள்பாலும் மிகுந்த இரக்கமும், பரிவும் காட்டுவதில் மிக நல்லவராம். எவ்வாறு எனின், தாம் செய்யப்போகும் ஆய்வுக்குப் பறவைகளின் முட்டைகளில் ஒன்றுக்குமேல் எடுக்கமாட்டாராம். இதனையுங்கூட இவர் தந்தையார் பொறுமல் இவர்மேல் சினந்து கொள்வாராம். தம் மகனுக்குப் படிப்பில் கவனம் செல்லவில்லை என்பதை அறிந்த இவர் தந்தையார் தம் மூத்தமகனுடன்மருத்துவம்பற்றிக்கற்கக் கல்லூரிக்கனுப்பினாராம்.

ஆனல் அங்குச் சொல்லித்தரப்பட்ட உயிரியல் இயங்கியல் இவருக்குப் பிடிக்கவில்லையாம். கல்லூரிப் படிப்பில் கவனம் செலுத்தாது வீணே காலத்தைக் கழித்தாலும் பொது அறிவை வளர்த்துக்கொள்வதில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்டாராம்.

இவர் ஒருமுறை முத்துக் குளிக்கச்செல்லும் ஆட்களுடன் சென்று கடற்புழு ஒன்றினைப் பார்த்து அதனைப்பற்றி நீண்ட ஆய்வும் செய்து, அவ்வாய்வை ஒரு நூலாகவும் வெளியிட்டிருக்கிறார். இவர் கல்லூரிப் படிப்பை வீணாக்குவது கண்ட இவர் தந்தை இவரை ஒரு கிறித்துவத் துறவியாக்குவதற்காக 'கேம்பிரிட்சு' பல்கலைக்கழகத்திற்கு அனுப்பி வைத்திருக்கிறார். அங்கு இவர் நல்ல முறையில் கல்வி கற்கவில்லை என்பதற்காக "இவன் எதற்கும் உதவ மாட்டான்" என இவருடைய ஆசிரியர்கள் கருதி விட்டனராம். இக்காலத்தில் இவர் ஒருநாள் ஒரு மரத்திலிருந்த இரண்டு அழகிய பூச்சிகளைப் பிடித்தபொழுது மற்றொரு பூச்சி இவர் கண்ணுக்குத் தென்படவே இரண்டை வாயில் வைத்துக்கொண்டு மூன்றாவது பூச்சியைப் பிடிக்க முயன்றாராம். அது போழ்து வாயிலிருந்த இரு பூச்சிகளில் ஒரு பூச்சி காடி (திராவகம்) போன்ற நீரினைக் கக்கிவிட்டதாம். ஆதலின் அதன் எரிச்சல் தாங்க வியலாது வாய்திறந்திட அப்பூச்சிகளும் ஓடின. பிறகு வேலையாள் உதவியோடு அப்பூச்சிகளைப் பிடித்து ஆராய்ந்தாராம். கல்லூரிப் படிப்பிலும் இளங்கலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றிருக்கின்றார். அதுகால் 'கென்சுலோ' என்னும் அறிஞரின் தொடர்பு கிடைத்திருக்கின்றது. இவரின் தொடர்பாலேயே தார்வினுடைய பிற்காலம் ஒளிவீசத்தொடங்கிப் பொற்காலமாக மாறியிருக்கிறது. கென்சுலோவின் வற்புறுத்தலால் படைத்தலைவர் 'பிட்சுராய்' என்பவருடன் உலகின் பலபாகங்களைச் சுற்றிப்பார்க்க 1831-ஆம் ஆண்டு திசம்பர்த் திங்கள் 29-ஆம் பக்கல் சென்றிருக்கின்றார். கப்பலில் பயணம் செய்யும்பொழுது தார்வினுக்கும் பிட்சுராய்க்கும் தருக்கம் பல ஏற்பட்டதாம். அதனால் ஒருவர்க்கொருவர் மனச்சோர்வோ வருத்தமோ கொள்ளவில்லையாம்.

இவர் கப்பலில் செல்லும் பொழுது பலவகையான மீனின் இனங்களைப் பிடித்து ஆய்வு செய்திருக்கின்றார். அமெரிக்காவில் நடக்கும் அடிமை வணிகம் பற்றியும் பிட்சுராயுடன் தருக்கம் செய்திருக்கின்றார். அதன் விளைவாகவே தென் அமெரிக்காமல் உள்ள பலவிடங்களுக்குஞ் சென்று பலவற்றினை அறிய முனைந்த இவர்க்கு அங்கு வாழ்ந்த மக்க

ஏரின் நாகரிகமற்ற வாழ்க்கை வெறுப்பையே ஊட்டியதாம். பிறகு 1836-ஆம் ஆண்டு அக்டோபர் 2-ஆம் பக்கல் தாய்நாடு திரும்பிய மூன்றாண்டுகளுக்குப் பின் 1839-ஆம் ஆண்டு சனவரித் திங்கள் 29-ஆம் பக்கல் 'ஏம்மா' என்ற பெண்ணை மணந்து இல்வாழ்க்கை நடத்தத் தொடங்கினார். இலண்டனில் ஆய்வு செய்ய நல்ல ஏந்து இல்லாததால் 'தௌன்' என்னும் ஊர் சென்று வாழ்ந்து வரலானார்.

தார்வின் விரைந்தெழுந்து குளித்துக் காலை யுணவு உண்டு முடித்து 9-30 மணிவரை ஆய்வு செய்து, பின் வெளிவரும்பொழுது "இன்றைய செயலைச் சீர்படச் செய்தேன்" என்னும் பெருமித உணர்வோடு வெளிவருவாராம். அதன்பிறகு தாம் முன்பு ஆய்ந்த செடிகளைக் கவனித்து அவை எந்நிலையில் உள்ளன என்று அடிக்கடி பார்ப்பாராம். அவற்றை எல்லாம் மாந்த உருவாக நினைத்து "ஏண்டா போக்கிலிப் பயலே இன்று ஏன் சுருங்கிவிட்டாய்" என்றும் "இந்த அசட்டுப் பிள்ளைகள் நான் எதனைச் செய்ய வேண்டாவென்று கூறுகிறேனோ அதனையே செய்வர்" என்றும் சினந்து கொள்வாராம்.

ஒரு முறை இவரின் செயல்முறைகளையும், புட்டாங்குகளையும் கண்ணுற்ற ஒரு தாளிகையாளர் இவர் தலையையும் (தார்வின் தலையையும்) தொரில்லாக் குரங்கின் உடலினையுமுடைய ஒரு படத்தினையும் வரைந்து வெளியிட்டிருக்கிறார். இதனைக்கண்ட இவரோ தாளிகையாளர்மீது சிறிதுகூட சினங்காட்டவில்லையாம், அதற்கு மாறாகச் சிரித்துக்கொண்டே "இதனை இன்னுஞ் சிறிது அழகாய் வரைந்திருக்கலாம்" என்றாராம்.

இவர் பெரிய வாணிகன்போல் வருமானம் செலவு இருப்பு என ஒவ்வோர் ஆண்டுக்கும் கணக்கிட்டு வந்திருக்கின்றார். மாலை 4-மணியிலிருந்து இரவு நெடுநேரம் ஆய்வு செய்து கொண்டே இருப்பாராம். குழந்தைகளிடம் மிகுந்த அன்புகாட்டுவாராம். ஆதலின் இவர் மகள் 'ஆன்' இறந்து பட்டபோது இவரடைந்த துயருக்கு எல்லையே இல்லையாம். நண்பர்களைப் பார்க்க அவர்களின் வீடுகளுக்குச் செல்லமாட்டாராம். ஆதலின் இவரது வீட்டிற்கே விருந்தினர்கள் நாடொறும் வந்துபோவது வழக்கமாம், அனைவரையும் தாமே வரவேற்பாராம். அதன் விளைவாகவே தம்ஊர் மக்களின் முன்னேற்றங் கருதி, நண்பர் கழகம் ஒன்றினை அமைத்து அதன் தலைவராகவும் இருந்திருக்கின்றார்.

இவரைப் பலரும் 'இறையிலி' என்றே கருதி வந்தனராம். கடவுள் உண்மை பற்றித் தருக்கம் செய்யாது தம் வேலையின் இலக்கு நோக்கிச் செல்பவரை இறையிலி என்று கூறவியலுமா? இவருக்குச் சமய உணர்வு இல்லையெனின் இவரைச் சமயத் துறவியாக்க இவர் தந்தை முனைந்தபோது அவரது கோட்பாட்டிற்கு இசைந்திருப்பாரா? "கடவுள் உண்டு என்பதனை மறுக்கும் இறையிலி நானல்லன்" என்றும் "ஒன்றும் அறியாதவன் நான்" என்றும் அடிக்கடி கூறிக்கொள்வாராம். அதுமட்டுமன்று; இவர் சமயத்தைப் பரப்பிட ஆர்வமும் முயற்சியுங்கூட காட்டினர் என்பதற்குத் தென் அமெரிக்காவில் கிறித்துவ சமயத்தினைப் பரப்புவதற்காக ஆண்டுதோறும் நன்கொடை அளித்து வந்ததே இவரின் இறையுணர்வுக்கு எடுத்துக்காட்டாக அமையலாம் அன்றோ?

தார்வினுடைய அறிவையும், பொறுமையையும், விடாமுயற்சியையும் கண்டு அவரை உலகம் போற்றவில்லை. இத்தகைய தன்மைகள் உடையவர்கள் உலகில் எத்தனையோ பேர்கள் உண்டு. அவர்களையெல்லாம் உலகம் விரைவில் மறந்து விடுகின்றதன்றோ? ஆதலின் தார்வினை மட்டும் உலகம் மறந்துவிட வில்லை என்பதற்குரிய கரணியம் யாதோ எனின், மாந்த வுள்ளத்தில் மாபெரும் புரட்சியை உண்டு பண்ணிக் குரங்கிலிருந்து மாந்தன் பிறந்தான் என்ற கொள்கையை நிலைநாட்டிச் சென்றார் என்பதே ஆகும்.

## கொசுவும். கொசுக்கடியும்!

உலகில் 2500 வகைக் கொசுக்கள் இருக்கின்றன. ஒரு கொசு தன் வாழ்நாளில் 400 அடி தொலைவிற்குமேல் பறப்பதில்லையாம். கமகமவென்று மணங்கமழும் முகமாவையும் நறுமண நெய்களையும் பூசிக்கொள்கின்றவர்களைத்தான் கொசு மிகுதியாகக் கடிக்குமாம்.

—செய்தி—ந. சு. தமிழன்பன், பண்டசோழநல்லூர்.

**தமிழ்ச்சிட்டு, கடலூர்-1.**

தனித்தமிழ் சிறுவர் கலையிதழ்

**மாற்றப்பட்ட உறுப்பினர் கட்டணங்கள்.**

| | உள்நாடு. | வெளிநாடு, கொழும்பு |
|---|---|---|
| ஆண்டுக் கட்டணம் உருபா. | 2-50 | 4-00 |
| தனியிதழ் ,, | 0-20 | 0-30 |

அரையாண்டுக் கட்டணம் இல்லை.

ஓரிதழுக்கு 40 காசு மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க!

# இந்தியப் புகைவண்டித் துறை.

1. 'இந்தியா'வில் 1853-ஆம் ஆண்டில்தான் முதன் முதலில் புகைவண்டி விடப்பட்டது.

2. 'இந்தியா'வின் முதல் புகைவண்டியின் பயணத் தொலைவு 33,000 சீரடிகள்.

3. 'இந்தியா'வின் முதல் புகைவண்டி 'பம்பாயி'லிருந்து 'தாறு வரை'சென்றது.

4. இன்று நம் நாட்டில் ஏறத்தாழ 7,000 புகைவண்டி நிலையங்கள் உள்ளன.

5. 10,000 புகைவண்டிகள் இரவும் பகலும் இடைவிடாமல் ஓடுகின்றன.

6. 'இந்திய'ப் புகை வண்டிப் பாதையின் மொத்த நீளம் 59 000 பதினூற்று சீரடிகள். (கிலோ மீட்டர்).

7. 'இந்தியப் புகை வண்டித்துறை' மக்கள் போக்கு வரவில் 55 விழுக்காட்டையும், பொருள்கள் போக்குவரவில் 80 விழுக்காட்டையும் நிறைவேற்றுகிறது.

8. 1967-ஆம் ஆண்டில் 219.1 கோடி மக்கள் இந்தப் புகைவண்டிகளில் பயணம் செய்துள்ளனர்.

9. நம்நாட்டின் மொத்த நிலக்கரியில் 90 விழுக்காடு புகைவண்டிகளின் மூலம் செல்கிறது,

10. 1967-ஆம் ஆண்டில் இந்தியப் புகைவண்டிகள் 6.58 கோடி கல்லெடை நிலக்கரியைச் சுமந்து சென்றுள்ளன.


11. 'கல்நெய்' போன்ற பொருட்களைக் கொண்டு செல்ல 15,000 தனி 'தொட்டி வண்டிகள்' (டாங்க் வண்டிகள்) உள்ளன.

12. சென்ற ஆண்டு 1 கோடி கல்லெடை இரும்பையும், எஃகையும் நம் நாட்டுப் புகைவண்டிகள் எடுத்துச் சென்றன.

13. 2.05 கோடி கல்லெடை மாழைக்கனிகள் சென்ற ஆண்டில் நமது புகைவண்டிகள் மூலம் ஏற்றிச் செல்லப்பட்டன,

14. 13 இலக்கத்திற்கும் மிகுதியான ஆண், பெண்கள் 'இந்தியப் புகைவண்டித் துறை' பணிபுரிகின்றனர்.

(பெருங்காப்பியன்)




"சென்ற இதழில் வந்த புதிர் புதுமையான ஒன்று. திருக்குறளில் ஈடுபட மாணவர்களைத் தூண்டியது" -என்று சிலர் எழுதியிருந்தனர். ஆனால் புதுமை விரும்பும் மாணவர் சிலர் "அப்புதிர் மகிழ்ச்சியைத் தரவில்லை" என்றும் எழுதியிருந்தனர். காரணம் திருக்குறளை அவர்கள் பழைமை நூலாகக் கருதியதுதான். திருக்குறளைப் பழைமை என்பார் அறிவுக் குருடரே ஆவார். ஒளி, தண்ணீர், காற்று, இவ்வுலகம் எல்லாம் பழைமையான பொருள்கள்தாம். அன்புடைமை, அருளுடைமை, நட்பு, விருந்தோம்புதல், மெய்யறிதல், ஈகை முதலிய எல்லாப் பண்புகளும் பழையனவே. ஆனாலும் அவை இவ்வுலகம் உள்ளவரையில் தேவையான உயிர்நலன்கள். திருக்குறளும் அவற்றின் சிறப்பை நுணுக்கமாகக் கூறும் வாழ்க்கை நூலாதலால், இவ்வுலகம்போல் அந்நூல் என்றும் நிலைத்து நிற்பதாகும்! அது போகட்டும். சென்ற புதிரின் விடையைத் தெரிந்து கொள்ளுங்கள். நீங்களே திருக்குறளைத் தேடிக் கண்டுபிடித்துக்கொள்ள வேண்டும் என்பதால், விடையிலும்கூட குறள்களின் முதல் இரண்டு சொற்களையே கொடுத்துள்ளோம்!

விடை:-

(1) இறந்த வெகுளியின் (2) எனைத்தானும் நல்லவை.
(3) புறங்கூறிப் பொய்த்துயிர் (4) ஈன்ற பொழுதின்!
(5) கொலையிற் கொடியாரை (6) இறுதி பயப்பினும்!
(7) நாடென்ப நாடா (8) இல்லாரை எல்லாரும்.
(9) உற்றநோய் நோன்றல் (10) ஒன்னார்த் தெறலும்.

குறிப்பு:- இத்தகைய இலக்கியப்புதிரேயன்றி இலக்கணப்புதிர், எழுத்துப் புதிர், சொற்புதிர், பொருள் புதிர், மொழிப் புதிர், ஊர்ப்புதிர், நாட்டுப் புதிர் போன்றவற்றையும், அறிவியற் புதிர்களையும் கூட மாணவர்கள் எழுதி விடுக்கலாம்.



# உங்கள் மடல்கள்

0 சென்ற தமிழ்ச்சிட்டின் முகப்பு மிக நன்று. செம்மை வாழ்வு எனுந் தலைப்பின் பாடல் என்னை மிகவும் கவர்ந்தது. பன்முறை படித்து அதன் உள்ளுறையின் மிகச் சுருங்கிய மேன்மையான கருத்தினை அனைவரும் ஏற்றுக்கொண்டு வாழ்வில் கடைப்பிடிப் பார்களாக. திருக்குறள்-புதிர் திருக்குறள் பயிற்சிக்கு மிகவும் இன்றிமையாதது. கும்பம் இதழின் பின் அட்டையில் வெளி வந்த திருக்குறள் அறிவு (பாடல்) மிக நன்று. மாணவர்களுக்கு மிகவும் பயனுடையது. குறள் எண் போட்டிருப்பின் நன்றாக இருந்திருக்கும்.

—இராம. பொய்யாமொழி, மேலக்கொழக்குடி, சிற்றூர் கருங்குழி, வடலூர்.

0 என்அறிவுக்கும் ஆற்றலுக்கும் அரிய விருந்துதரும் தமிழ்ச்சிட் டுக்கு என் வாழ்த்துகள். எனக்கு இச்சிறு அகவை (வயது) யிலேயே தமிழில் ஆர்வம் ஏற்பட்டுள்ளதற்குக் காரணம் உங்க ளுடைய தமிழ்ச்சிட்டே ஆகும். நான் தமிழ்ச்சிட்டு படிக்கும் வாய்ப்புப் பெற்றதற்கோ நான் முன்பு படித்த பள்ளியாசிரியர் திரு. நாராயணசாமி அவர்களே காரணம். அவர்க்கும் என் வாழ்த்து! மேலும் 'தமிழ்ச்சிட்டு' கடல்போல் எங்கும் பரவ வேண்டும் என்பது என் அடங்கா ஆவல்.

கு. கோபாலகிருட்டிணன், சொங்கலிங்கபுரம், சாத்தூர், முகவை.

0 தமிழ்ச்சிட்டு சிலை-சுறவ இதழில் "பிழையில்லாமல் எழுதுங் கள் பேசுங்கள்" என்ற தலைப்பின் கீழ்வரும் இரண்டாம் எண் ணிட்ட பகுதியில் "உ, உந்த, உம்பர், உப்படி என்னும் சொல் லாட்சி தற்பொழுது வழங்குவதில்லை" என்று புலவர் தி. நா. அறிவுஒளி அவர்கள் எழுதியுள்ளார்கள். உந்த, உப்படி முத லிய சொல்லாட்சிகள் இனறும் இலங்கையில் யாழ்ப்பாணத் தில் வழக்கில் இருக்கின்றன.

—ச. பிரபாவதி, கூட்டாம்புளி தம்பலகமம், இலங்கை.

0 கதிரவன் ஒளியென இருந்துகொண்டு எங்களின் அறியாமை இருளைப் போக்கிவரும் பெருந்தமிழ்ச்சிட்டே! உன் அருந் தொண்டால் நாங்கள் எண்ணற்றோர் ஏற்றம் பெற்று வருகின் றோம். இன்றுபோல் நீ என்றும் பாட எல்லாம்வல்ல இறைவனை இறைஞ்சுகின்றேன்.

—கதிரொளி, சேரன்மாதேவி நெல்லை (மா. வ.)

# வறுமைக்கு அஞ்சாதே!

0 வறுமை உன்னை வாட்டுவதைப் பற்றிக் கவலைப்படாதே!

0 தொடர்ந்த துன்பத்தால் நீ மனம் சாம்பிப் போகாதே!

0 நிமிர்ந்த நெஞ்சினனாய், செம்மாப்புடைய அறிவோடு நீ துன்பங்களை ஏற்றுக்கொள். அவற்றைப்போக்கச் சரியான வழிஎன்ன என்று அமைதியாக எண்ணி, அவ்வழியை விடாமுயற்சியோடு கடைப்பிடித்துவா.

0 உலகில் உள்ள பெருத்த செல்வர்களும், பெரிய அறிவாளிகளும் இளமையில் அளவிடற்கரிய துன்பத்தில் வாடியவர்களே என்று எண்ணி ஆறுதல் கொள். அவர்களைத் துன்பம் வாட்டிய பொழுதெல்லாம் அவர்கள் தங்கள் செம்மையான வழியை விட்டு அகலாதவர்களாகவும், துன்பத்தைக் கண்டு அஞ்சாதவர்களாகவும் கண்ணீர்விட்டு அழாதவர்களாகவுமே இருந்திருக்கின்றார்கள் என்பதை அறிந்து துணிவோடு இரு.

0 எத்தகைய வறுமையும் துன்பமும் உன்னை வந்தடைந்தாலும் உன் நேர்மையான கொள்கையைக் கைவிடாதே! நீ கடைப்பிடிக்கும் நேர்மை, அத்துன்பத்தையும் வறுமையையும் ஒரு நாள் வெற்றிகொண்டே தீரும் என்ற நம்பிக்கை உனக்கு எப்பொழுதும் இருந்துவரட்டும்.

0 உலகம் என்றுமே இருண்டு போனதில்லை; வானம் என்றுமே வறண்டுபோனதில்லை; காற்று என்றுமே வற்றிப்போனதில்லை; துன்பமும் என்றைக்கும் ஒருவனையே சுற்றிக் கொண்டிருந்ததில்லை.

0 இருளடைந்த உலகம் ஒளிபெறும் நாள் ஒன்று உண்டு; வறண்டுபோன வானம் பொழிந்து தள்ளும் நாளும் ஒன்று உண்டு; வற்றிப்போன காற்றும் மனங்குளிர வீசி உயிர்களை மகிழச்செய்யும் நாளும் ஒன்று உண்டு. உன் துன்பங்கள் விலகிப் போகும் நாள் ஒன்று கட்டாயம் வரும். இவற்றை நீ உறுதியென்று நம்பு!

0 தன்னம்பிக்கை, தன்னறிவு, தன்னாற்றல் உள்ள எவனும் துன்பங்களுக்காக மனம் சோர்ந்ததில்லை.

0 எந்தத் துயரிலும் உன் அறிவு வற்றிப் போவதில்லை; உன் மனம் அழுக்கடைவதில்லை; உன் ஆற்றல் குறைவடைவதில்லை.

0 என்றைக்கும் தலைநிமிர்ந்து திரி; இறுமாப்புக் கொள்ளாதே! அடக்கமாக இரு; அறிவை முடக்கி விடாதே! இரக்கப்படு; கோழையாக இருந்துவிடாதே!

0 துன்பத்தால் கல்வி துவளுவதில்லை; துன்பத்தைப்போல் மனத்தை வெளுக்கும் கருவி உலகத்தில் எதுவுமில்லை.

0 துன்பம் உனக்கு இயற்கை வைத்த தேர்வு. அத் தேர்வில் தேறிவிட்டால், முன்னேற்றத்திலிருந்து உன்னைத் தடுத்து நிறுத்தும் ஆற்றல் உலகில் எதுவும் இல்லை.

தென்மொழி மின் அச்சகம், கடலூர்-1.